**சுருக்கம்**

மாநகராட்சிகள் – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளுக்கு வார்டு குழுக்கள் அமைத்தல் –ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.143** **நாள்: 19.9.2011.**

**படிக்கப்பட்டன:**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 25120/ 2011/ எம்.3, நாள் 10.9.2011.

2. ஈரோடு மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித எண். இ5/17077/2011 நாள் 07.09.2011.
3. தூத்துக்குடி மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித எண்.21218/2005/எப்1 நாள் 08.09.2011.

----

**ஆணை:**

நகராட்சி நிர்வாக ஆணையர், முதலாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட ஈரோடு மாநகராட்சிக்கு 60 கோட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், 60 கோட்டங்களுக்கு 4 வார்டு குழுக்கள் அமைக்க ஈரோடு மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களின் கருத்துக்கள் கோரப்பட்டதாகவும், ஈரோடு மாநகராட்சி மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சிகளில் காசிபாளையம் நகராட்சி, பெரியசேமூர் நகராட்சி மற்றும் முத்தம்பாளையம் ஊராட்சி தவிர இதர உள்ளாட்சி அமைப்புகளின் மன்றங்கள் இதனை ஏற்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், ஒவ்வொரு வார்டு குழுவிலும் 15 கோட்டங்கள் சமமாக அமையுமாறு வார்டு குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளதால், காசிபாளையம் நகராட்சி, மற்றும் முத்தம்பாளையம் ஊராட்சியின் தீர்மானத்தையும், பெரியசேமூர் நகராட்சி, வார்டு எல்லைகள் குறித்து கருத்து தெரிவித்துள்ளதால் அத்தீர்மானத்தையும் நிராகரித்து, ஈரோடு மாநகராட்சிக்கு 4 வார்டு குழுக்களை அமைக்கலாம் எனவும், இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–A மற்றும் ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 8–ன்கீழ் ஆணைகளை வெளியிடுமாறு ஈரோடு மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**2.** மேலும், விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சிக்கு 60 கோட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், தூத்துக்குடி மாநகராட்சியின் 60 கோட்டங்களுக்கு 4 வார்டு குழுக்கள் அமைக்க தூத்துக்குடி மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களின் கருத்து கோரப்பட்டதாகவும், தூத்துக்குடி மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சிகள் இதனை ஏற்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–A மற்றும் தூத்துக்குடி

மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 8–ன்கீழ், தூத்துக்குடி மாநகராட்சிக்கு 4 வார்டு குழுக்களை அமைத்து ஆணைகளை வெளியிடுமாறு தூத்துக்குடி மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**3.** ஈரோடு மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் மீது, உரிய ஆணை பிறப்பிக்க பரிந்துரைப்பதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்து, மேற்குறிப்பிடப்பட்ட சிறப்புப் பணி அலுவலர்களின் அறிக்கையை இணைத்தனுப்பியுள்ளார்.

**4.** அரசு, ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளின் எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர்களின் அறிக்கைகள், பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீதான நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்து, அவற்றை ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில், இவ்வாணையின் பின்னிணைப்பில் கண்டுள்ளவாறு, ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளின் வார்டு குழுக்களை அமைத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**5.** இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கை (Appended Notification) **19.9.2011** –ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**6.** மேற்படி ஆணைகளின் அடிப்படையிலான உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச.கருத்தையா பாண்டியன்**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்:**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79. (இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கைகளை *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடவும், அதன் 50 நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர்கள், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டம்.
ஆணையர்கள், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி.
**நகல்:**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6/மாந.2/அ.ந.2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

## APPENDIX.

## NOTIFICATION- I.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) read with section 8 of the Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008), the Governor of Tamil Nadu hereby constitutes four wards committees for the Corporation of Erode and each of the said wards committee specified in Column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof:-

### THE TABLE.

| **Sl. No. (1)** | **Wards Committee (2)** | **Ward Numbers Comprising the Wards Committee (3)** |
|---|---|---|
| (1) | Wards Committee – I | 1 to 15 |
| (2) | Wards Committee – II | 16 to 30 |
| (3) | Wards Committee – III | 31 to 45 |
| (4) | Wards Committee- IV | 46 to 60 |

## NOTIFICATION-II.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) read with section 8 of the Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008), the Governor of Tamil Nadu hereby constitutes four wards committees for the Corporation of Thoothukudi and each of the said wards committee specified in column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof:-

### THE TABLE.

| **Sl. No. (1)** | **Wards Committee (2)** | **Ward Numbers Comprising the Wards Committee (3)** |
|---|---|---|
| (1) | Wards Committee – North | 1 to 13, 17 and 18 |
| (2) | Wards Committee – East | 14,15,16, 19 to 33 |
| (3) | Wards Committee – West | 34 to 47 |
| (4) | Wards Committee- South | 48 to 60 |

**S.KARUTHIAH PANDIAN**
**SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

**Section Officer.**